[1992 மார்ச் 10]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்புற மீனவர்கள் இயற்கைச் சீற்றத்திற்கு உள்ளாகும் நிலையில் உள்ளனர். உள்நாட்டு மீனவர்கள் கடற்புற மீனவர்களை விட பாதுகாப்பான இடங்களில் வசிக்கின்றனர். இருப்பினும், நிதி நிலைமை சீரடைந்தவுடன் உள்நாட்டு மீனவர்களும் இச்சலுகையைப் பெறக்கூடிய வகையில் ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (†) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் குறிப்புகள்.

(அ) வினா நேரம் முடிவுற்றவுடன் பிரச்சினைகளை எழுப்பும் முறை குறித்து.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என் கவனத்திற்கு எதுவுமே கொண்டு வராமல் இப்போது சொல்வதற்கு எந்த விதியிலும் இடம் இல்லை. என்னிடத்திலே ஏதாவது அனுமதி பெற்றிருக்க வேண்டும். அல்லது என் கவனத்திற்கு ஏதாவது எழுதிக் கொடுத்து இருக்க வேண்டும். இப்போது அனுமதி இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) இப்போது அனுமதி இல்லை தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) என் கவனத்திற்கு நீங்கள் எதுவும் கொண்டு வரவில்லை. நான் இப்போது இதை அனுமதிக்கவில்லை என்கிறபோது என்ன செய்ய முடியும் ? (குறுக்கீடு). என் கவனத்திற்கு கொண்டுவரவில்லை. எனவே. நான் வேறு பிரச்சினைகளை எடுக்க வேண்டும்.

முற்பகல் 10-50

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி, நான் நிற்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் வேறு பிரச்சினைகளை எடுக்கவேண்டும். (குறுக்கீடு) திரு திருநாவுக்கரசு நீங்கள் என்கவனத்திற்கு எதுவும் கொண்டுவராமல் திடீரென்று எழுந்தால் நான் என்ன செய்ய முடியும் ? நான் இப்போது வேறு பிரச்சினைகளை எடுக்கவேண்டும். (குறுக்கீடு) நீங்கள் என் கவனத்திற்கு

எதுவுமே கொடுக்காமல் திடீரென்று எழுந்து சொல்லக்கூடாது. என்ன பிரச்சினை, எதற்காக என்பது எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு) நான் நிற்கிறேன், தயவுசெய்து அதற்காகவாவது உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி உட்கார வேண்டும்.

திரு. திருநாவுக்கரசு, எதுவாக இருந்தாலும் என்னிடத்தில் முன்கூட்டியே எழுதிக் கொடுத்து விட்டு எழுப்புங்கள். (குறுக்கீடு) 'சீரோ அவர்'-இல் எழுப்ப வேண்டுமென்றால் பேரவைத் தலைவருக்கு முன் அறுவிப்புக் கொடுத்துவிட்டு எழுப்புங்கள். (குறுக்கீடு) நான் இப்போது அனுமதிக்கவில்லை, தங்களை நான் அனுமதிக்கவில்லை (குறுக்கீடு) நான் அனுமதிக்காதபோது நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பில்லை. எந்த உறுப்பினர் எழுந்து பேச வேண்டுமானாலும் பேரவைத் தலைவருடைய அனுமதி இருக்க வேண்டும். வேறு வகையில் எதுவும் விதி இல்லை.

(ஆ) மேல்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் தொழிற்கல்வி பகுதி நேர ஆசிரியர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி அவர்கள் நடத்திவரும் போராட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சில மேல்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் தொழிற்கல்வி ஆசிரியர்கள் பலர் தங்கள் போராட்டத்தின் காரணமாக கைது செய்யப்பட்டு இப்போது சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அது பற்றிய பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று திரு. ஜி. பழனிசாமி, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. ஆர். சிங்காரம், திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் என்னுடைய அனுமதியைக் கேட்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதிக்கிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி பகுதி நேர தொழிற்கல்வி ஆசிரியர்கள் அரசாணை 714, நாள் 28-5-1990-ன்படி ஒரு ஒப்பந்தத்தோடு அதாவது 1-4-1991 முதல் 1,037 இரு பகுதி நேர ஆசிரியர்களை அடிப்படையான ஊதியங்களோடு பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற ஒப்பந்தத்தோடு பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக 1.737 இரு பகுதி நேர ஆசிரியர்களில் 1-4-1990 முதல் 800 ஆசிரியர்களுக்கு அடிப்படையான ஊதியங்கள் அரசாணையின்படி வழங்கப்பட்டது. அதிலே பணி மூப்பு புறக்கணிக்கப்பட்டுள்ளதன் காரணமாக அரசாணையின்படி நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்பதற்காக 1,037 இரு பகுதி நேர ஆசிரியர்களுக்கு அடிப்